

தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதியில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ. தலைமையில் கழக பொருளாலர் டி.ஆர்.பாலு எம்.பி, காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி.காமராஜ், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் எஸ்.இந்திரன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களும், தொண்டர்களும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி ஆதரித்து 32,33,49,50,51,52 ஆகிய வட்டங்களில் கடும் உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல் வீதி வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் இதில் கழக நிர்வாகிகளும் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### பா.ஜ.க.வுக்கு ஆதரவாகச் செயல்படுவதாக

# தி.மு.க.வை இட்டுக்கட்டி பேசுவதா?

## மம்தா பானர்ஜிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை கண்டனம்!

**சென்னை, ஏப். 9 -**

**"பா.ஜ.க.வுக்கு ஆதரவாக தி.மு.க. செயல்படுவதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறுவது கண்டனத்திற்குரியது" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

**இதுகுறித்து அவர் விடுத் துள்ள அறிக்கை வருமாறு :-**



மேற்கு வங்காள மாநிலத்தின் முதலமைச்சராக மூன்று முறை பதவி வகித்து வருகிற திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி அவர்கள் அடிப்படை அறிவு கூட இல்லாமல் காங்கிரசும், தி.மு.க.வும், பா.ஜ.க.வோடு ரகசிய உடன்பாடு வைத்துள்ளார்கள் என்று பேசியிருப்பது கடுமையான கண்டனத்திற்குரியது, கடுகளவு உண்மை கூட இல்லாதது.

இந்தியாவிலேயே தேசிய அளவில் பா.ஜ.க.வையும், பிரதமர் நரேந்திர மோடியையும் எதிர்த்து நாள்தோறும் கடும் விமர்சனங்களை வெளிப்படுத்தி வருபவர் மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி. அவர் மக்களவையில் பேசுகிறார் என்றுச் சொன்னால், நரேந்திர மோடி அவைக்கு வருவதை தவிர்த்து வருவதை பார்த்து வருகிறோம். ஏனெனில், அவரது கேள்விக்கணைகளை பிரதமரால் எதிர்கொள்ள முடியாதது தான் காரணமாகும். கொள்கை ரீதியாக காங்கிரஸ் கட்சிக்கும், பா.ஜ.க. வுக்கும் சித்தாந்த ரீதியாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் இன்று, நேற்று தொடங்கியதல்ல. 1925 ஆம் ஆண்டு நாகபுரியில் என்றைக்கு ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தோன்றியதோ, வகுப்புவாத நச்சுக் கருத்துகளை பரப்ப முன்வந்ததோ, அன்றிலிருந்து இன்று வரை பா.ஜ.க.வை எதிர்த்து வருகிற ஒரே இயக்கம் காங்கிரஸ் கட்சி தான். நேரு பாரம்பரியத்தில் வந்த ராகுல் காந்தி உட்பட ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை கடுமையாக விமர்சிப்பதற்கு என்றைக்குமே தயங்கியதில்லை.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நச்சுக் கருத்தினால் மூளை சலவை செய்யப்பட்ட நாதுராம் கோட்சே தான் தேசத்தந்தை மகாத்மாவை படுகொலை செய்தான். கோட்சேவின் வழிவந்தவர்கள் தான் இன்றைக்கு இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், என்றைக்குமே காங்கிரஸ் கட்சி ஆர்.எஸ்.எஸ், ஜனசங்கம், பா.ஜ.க.வோடு எந்த வகையிலும் சமரசம் செய்து கொண்டதில்லை. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த 5 ஆண்டுகளாக பா.ஜ.க.வை எதிர்த்து செய்து வருகிற விமர்சனத்தைப் போல எந்த மாநில முதலமைச்சரும் செய்திருக்க முடியாது.

தமிழ்நாட்டில் வகுப்புவாத பா.ஜ.க., காலூன்றக் கூடாது, வளரக் கூடாது என்கிற வகையில் கடுமையான ஒரு சித்தாந்தப் போரை நடத்திக் கொண்டிருப்பவர் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின். பா.ஜ.க. வையும், நரேந்திர மோடியையும் கடுமையாக எதிர்க்கின்ற காரணத்தினாலேயே வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகிய பா.ஜ.க.வின் கைப் பாவையாக இருக்கிற அமைப்புகள் மூலம் தி.மு. கழக தலைவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அடக்குமுறைகள் ஏராளம்.

அவைகளையெல்லாம் அரசியல் பேராண்மையோடு எதிர்த்து தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை திரட்டி பா.ஜ.க.வை தமிழ்நாட்டில் நுழைய விடாமல் தடுத்துக் கொண்டிருப்பவர் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின். அத்தகைய கொள்கைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிற நிலையில், கொஞ்சம் கூட பொறுப்பற்ற முறையில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்படுவதாக தி.மு.க.வை இட்டுக்கட்டி பேசுவதன் மூலம் மம்தா பானர்ஜியின் அரசியல் அறியாமை தான் வெளிப்படுகிறது.

எனவே, ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கிற மம்தா பானர்ஜி, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களையும் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்படுகிறார்கள் என்று சொல்வது மம்தா பானர்ஜியின் ஒரு பொறுப்பற்ற செயலாகும். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே, ஆத்திரத்தில் நிதானமிழந்து அவர் இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறுவதை வன்மையாக கண்டிக்கிறேன். உடனடியாக இந்த குற்றச்சாட்டை திரும்பப் பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### பல்லாவரம் தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் அனகை டி.முருகேசன் உடன்

# திரிசூலத்தில் பல்லாவரம் இ.கருணாநிதி வீடு வீடாக வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்.9-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் வர இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பாக தேமுதிக கட்சியின் சார்பாக டி. முருகேசன் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார் அவர் தொடர்ந்து பல்லாவரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் முக்கியஸ்தர்கள் கழக நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி தேமுதிக வேட்பாளர் உடன் தொகுதியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் மகூதிகள் சர்ச் பாதர்கள் ஆகியோர்களின் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறார்.

அது தொடர்ச்சியாக இன்று காலை புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட திரிசூலம் ஊராட்சி பகுதியில் இ. கருணாநிதி எம்எல்ஏ வேட்பாளர் அணகை டி.முருகேசன் அழைத்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று கழக அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பல்வேறு மக்கள் நல திட்டங்களையும் இல்லத்தரசிகளுக்கு 8000 பொருள் வாங்கப்படும் என்ற சிறப்பு திட்டத்தையும் சட்டமன்ற உறுப்பினராக இருந்து திராவிட மாடலின் அரசின் மூலம் திரிசூலம் பகுதியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு மக்கள் நலப் பணிகளையும் திட்டங்களும் எடுத்துரைத்து நீங்கள் அனைவரும் முரசு சின்னத்துக்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வேட்பாளர் டி முருகேசனை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று தாய்மார்களிடமும் பொதுமக்களிடமும் ஆதரவு திரட்டினார் அப்பொழுது ஒன்றிய கழகச் செயலாளர் ஜி. கே. மணி என்கிற விவேகானந்தன் மாவட்ட கழகப் பிரதிநிதி மணல் செல்வம் ஒன்றிய கவுன்சிலர் சௌமியா ஊராட்சி மன்ற தலைவர் மாரிமுத்து ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் திரிசூலம் ஐயப்பன் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி கழக நிர்வாகிகள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆகியோர் பெரும் திரளாக திரண்டு பிரச்சாரத்தில் கலந்து கொண்டு ஆதரவு திரட்டினார்கள்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, பெரிய கடை வீதி பகுதி, கோதா (அத்தர் ஜமாத்) பகுதி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்பு பகுதியில் கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் – டி.ஜி.பி. மாற்றம்!

# தேர்தல் ஆணையம் செய்யும் அதிகார அத்துமீறல் ஆணவத்தின் உச்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, ஏப்.9-**

**'தேர்தல் ஆணையம் இப்போது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. ஆகியோரை மாற்றி, ஒருதலைப்பட்சமான அத்துமீறிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்காகத் தேர்தல் ஆணையம் செய்யும் அதிகார அத்துமீறல் ஆணவத்தின் உச்சகட்டம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

பா.ஜ.க.வை ஆதரித்து நேரில் பரப்புரை செய்யக் களத்திற்கு வராத குறையாகத் தேர்தல் களத்தில் முழு மூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தேர்தல் ஆணையம், இப்போது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம் ஐ.ஏ.எஸ் அவர்களை மாற்றி, ஒருதலைப்பட்சமான அத்துமீறிய அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதற்குக் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயமான – சுதந்திரமான தேர்தலை நடத்த வேண்டிய தேர்தல் ஆணையம், பா.ஜ.க. ஆட்சியில் அக்கட்சியின் கட்டளைகளை நிறைவேற்றி வருவது வெட்கக்கேடானது. அரசியல்சட்டம் தேர்தல் ஆணையத்திற்குத் தந்துள்ள பாதுகாப்பு பா.ஜ.க.விற்குத் தேர்தல் வேலை பார்ப்பதற்கு அல்ல. நாட்டை சர்வாதிகாரப் பாதையில் கொண்டு செல்லத் துடிக்கும் பா.ஜ.க. ஆட்சியில் ஆதிக்க மனப்பான்மையுடன் பணியாற்றும் தேர்தல் ஆணையம் இதனை உணராமல் இருப்பது, ஆணையத்தின் கண்ணியத்தைக் கடைத்தெருவில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

பா.ஜ.க. ஆளும் அசாம் மாநிலத்தில் தேர்தல் நடக்கிறது. அங்கு டி.ஜி.பி, தலைமைச் செயலாளரை மாற்றவில்லை. பா.ஜ.க. பிராக்சி ஆட்சி நடத்திய பீகார் மாநிலத்தில் தேர்தல் நடைபெற்றது. அங்கும் டி.ஜி.பி, தலைமைச் செயலாளரை மாற்றவில்லை. தமிழ்நாட்டில் மட்டும் தலைமைச் செயலாளர், டி.ஜி.பி. ஆகியோர் ஆகியோர் தேர்தல் ஆணையத்தின் கண்ணை உறுத்தியிருக்கிறார்கள். அவர்களை பா.ஜ.க.வின் தூண்டுதலில் மாற்றியிருக்கிறது.

தமிழ்நாட்டில் பா.ஜ.க., அ.தி.மு.க.வுடன் கைகோத்து நடத்த இருக்கும் தேர்தல் முறைகேடுகளுக்குத் துணை போகத் துடியாய்த் துடிப்பது தேர்தல் ஆணையத்திற்கு அழகு அல்ல. ஆணையத்தின் அலுவலர்கள் இன்று இருக்கலாம்; நாளை பதவியிலிருந்து போய் விடலாம். ஆனால் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நம் அரசியல்சட்ட முன்னோர்களால் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை நடுத்தெருவில் கொண்டு வந்து நிறுத்தப்படுவது நம் நாட்டிற்கும் – சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கும் பேராபத்து.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மீறி, தலைமைத் தேர்தல் ஆணையரை நானே தேர்வு செய்வேன் என்று புதிய சட்டத் திருத்தம் கொண்டு வந்த பிரதமர் அவர்களுக்கோ அல்லது அவர் வழிநடத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கோ தேர்தல் ஆணையத்தின் புனிதத்தன்மை புரியப் போவதில்லை என்பதைத் தமிழ்நாடு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மட்டும் "தலைமைச் செயலாளர்" "டி.ஜி.பி." ஆகியோரை மாற்ற பா.ஜ.க. தூண்டி விடும் காட்டு தர்பார் பிரதிபலிக்கிறது. ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கையாக இருக்கும் தேர்தல் ஆணையமும் காவிமயமாகி விட்டது என்பதையே இந்த நடவடிக்கைகள் எல்லாம் காட்டுகின்றன.

எத்தனை அதிகாரிகளை மாற்றினாலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க. படுதோல்வியில் மண்ணைக் கவ்வப் போவது உறுதி. சீப்பை ஒளித்து வைத்து விட்டால் திருமணத்தை நிறுத்திவிடலாம் என்பதுபோல் அ.தி.மு.க. - பா.ஜ.க. அடங்கிய "என்.டி.ஏ." கூட்டணிக்காகத் தேர்தல் ஆணையம் செய்யும் அதிகார அத்துமீறல் ஆணவத்தின் உச்சகட்டம்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

### மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி மறுப்பு:

# ஒன்றிய அரசின் இரட்டை நிலைப்பாட்டால் தமிழ்நாட்டுக்கு துரோகம்!

## மகாராஷ்டிரா முதலமைச்சருக்கு – கழக எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன் – கலாநிதி வீராசாமி பதில்!

**சென்னை, ஏப். 9 -**

**மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசு அனுமதி மறுத்துள்ளது அதன் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. அதன் மூலம் தமிழ்நாட்டுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது. ஆனால் மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் அதை மறைத்து விட்டு பிளாக்மெயில் செய்வது போல் பேசுகிறார் என்று கழக எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி பேட்டியளித்துள்ளனர்.**





தி.மு.க. எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி ஆகியோர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு :

மகாராஷ்டிர மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் பா.ஜ. வேட்பாளர் வெற்றி பெற்றவுடன் மெட்ரோ திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார். இந்த விவகாரத்தில் தனது மிக கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இங்கு ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும், முதல்வரும் இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவி ஏற்ற முதல் நாளிலிருந்து இத்திட்டம் குறித்து என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது குறித்த தேதி வாரியான விவரங்கள் எங்களிடம் உள்ளன.

மே 7, 2021 அன்று பதவி ஏற்ற உடனேயே, மதுரை மெட்ரோ திட்டத்தை மீண்டும் உடனடியாக தொடங்குவதாக அறிவித்து, அதற்கான வழிகாட்டுதல்களை அவர் வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு தேவையான அனைத்துத் தொழில்நுட்ப, நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டத்தின் மாநில அளவிலான அனைத்துப் பூர்வாங்க பணிகளும் 100 சதவீதம் நிறைவடைந்துள்ளன. குறிப்பாக, செப்டம்பர் 6, 2025 அன்று சி.எம்.ஆர்.எல் மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணைந்து திருமங்கலம் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு, சுரங்கப்பாதை சீரமைப்பு பிரச்னைகளுக்கும் தீர்வு கண்டுள்ளனர். திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன் இவை அனைத்தும் முறையாக திட்டமிடப்பட்டு, பணிகள் அனைத்தும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவ்வளவு ஆக்கப்பூர்வமான வேலைகள் நடந்திருக்கும் நிலையில், இவற்றை எல்லாம் புறந்தள்ளிவிட்டு, எங்களுடைய உறுப்பினரை தேர்ந்தெடுத்தால் தான் இதை செய்வோம் என்று கூறுவது அப்பட்டமான பிளாக்மெயில் அரசியல். முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதல்வர் இத்தனை பணிகளைச் செய்திருக்கும்போது, எதன் அடிப்படையில் நீங்கள் அதனை உதாசீனப்படுத்துகிறார்?

நவம்பர் 18, 2025 அன்று, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20 லட்சத்தை எட்டவில்லை எனக் கூறி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ திட்ட அறிக்கைகளை மத்திய அரசு திருப்பி அனுப்பியுள்ளது.

ஆனால், ஆக்ரா, பாட்னா, போபால் போன்ற வட இந்திய நகரங்களில் மக்கள் தொகை குறைவாக இருந்தபோதே, மெட்ரோ திட்டங்களுக்கு அனுமதி கொடுத்து கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மதுரை என்று வரும்போது மட்டும் 15.6 லட்சம் மக்கள் தொகையை காரணம் காட்டி நிராகரிப்பது ஒன்றிய அரசின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. இது தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழர்களுக்கும் இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

மகாராஷ்டிரா முதல்வர் இங்கு வந்து இத்தகைய வாக்குறுதிகளை அளிப்பதன் பின்னால் உள்ள அரசியல் பின்புலத்தை நாம் உணர வேண்டும். இதையே தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இது என்.டி.ஏ vs மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி என்பதைக் காட்டிலும், டெல்லி vs தமிழ்நாடு இடையிலான தேர்தல் என்று சுட்டிக்காட்டுகிறார். தேவேந்திர பட்னாவிஸின் இன்றைய பேச்சே அதற்கு சிறந்த உதாரணமாகும்.

தேவேந்திர பட்னாவிஸ் துணை முதல்வராக இருந்த போது, அங்கிருந்த பல லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் குறிப்பாக பாக்ஸ்கான், டாடா ஏர் பஸ், மெடிக்கல் பார்க் போன்றவை குஜராத்திற்கு மாற்றப்பட்டன. சொந்த மாநில உரிமைகளை அடகு வைத்தவர்தான் இன்று தமிழ்நாட்டிற்கு வந்து வாக்குறுதி அளிக்கிறார்.

இவ்வாறு அவர்கள் பேட்டியளித்தனர்.



திருவள்ளூர் கிழக்குமாவட்டம் கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. கலந்து கொண்டு, தேர்தல் பணிகள் குறித்து விரிவான ஆலோசனைகள் மேற்கொண்டார். உடன் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.